Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | | |
| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 1 -00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது பங்குனி 22 ஆம் நாள் துல்கஃதா 20 (4 4 64) சனிக்கிழமை இதழ் 54

# இடதுசாரி தலைவர்களுடன் நிதிமந்திரி பேச்சு

## ஒத்துழைப்புக்கான வாய்ப்பு பற்றி பூர்வாங்க ஆலோசனை

கொழும்பு, வெள்ளி

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடதுசாரி ஐக்கிய முன்னணிக்குமிடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள்பற்றி நிதிமந்திரி திரு டி. பி. இலங்கரத்தின இடதுசாரி ஐக்கிய முன்னணித் தலைவர்களுடன் பூர்வாங்கமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார். ஒத்துழைப்புக்கான வாய்ப்புக்களை அறியும் பூர்வாங்கக் கட்டத்திலேயே இப்பேச்சுவார்த்தைகள் இன்னமும் இருக்கின்றன.**

இடதுசாரி முன்னணியைச் சேர்ந்த சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா, கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, எம். ஈ. பி. தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்து திரு. இலங்கரத்தின பேசியதாக அறியப்படுகிறது.

இரண்டு கட்சிகளும் ஒத்துழைக்கக்கூடிய அரசியல், பொருளாதார, கலாசாரக் கொள்கைத் திட்டங்களைக் கொண்ட பொதுவேலைத் திட்டம் அமைப்பதுபற்றி இப் பேச்சுவார்த்தைகளில் ஆலோசிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

## அரசியலில் பிக்குகள் தலையிடுவது அவசியம்

### பலவேகயா உபதலைவர் அபிப்பிராயம்

கொழும்பு, வெள்ளி

'பலதரப்பட்ட விரோதிகளிடமிருந்துநாட்டையும் பௌத்த சாசனத்தையும் பாதுகாக்க பிக்குகள் கடந்த காலத்தில் முக்கிய பணியாற்றியுள்ளார்கள். எனவே அரசியல்துறையில் பிக்குகள் ஈடுபடக்கூடாதென எவரேனும் சொல்வாரானால் அவர் பௌத்த சாசனத்தின் விரோதியாகக் கணிக்கப்படவேண்டும்.

இவ்வாறு இன்சூரன்ஸ் கார்ப்பரேஷனின் ஜெனரல் மனேஜரும் பௌத்த ஜாதிக பலவேகயாவின் உபதலைவருமான திரு.நிஸங்கா விஜயரத்தின களனியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

திரு. நிஸங்கா மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பௌத்த சாசனத்தைக் காப்பாற்ற பௌத்த மன்னர்களின் உதவியுடன் பௌத்தபிக்குகள் போர் தொடுத்த சம்பவங்கள் சரித்திரத்தில் நிறைய உண்டு.

அரசியலில் தீவிர பங்கு கொள்வது பௌத்த பிக்குகளின் கடமை. தர்மத்தைமட்டும் போதனை செய்துகொண்டு அரசியலையும் சமூகத்தில் அவர்கள் ஆற்றவேண்டிய கடமையையும் புறக்கணித்துவிடக் கூடாது. தேர்தல் நெருங்கும் சமயத்தில் எந்தக் கட்சிக்கு மக்கள் வாக்களிக்கவேண்டும் என் வழிகாட்ட பிக்குகள் கடமைப்பட்டுள்ளார்கள்.

கிராமசபைத் தேர்தலிலோ பார்லிமெண்ட் பொதுத் தேர்தலிலோ பிக்கு ஒருவர் போட்டியிடுவதில் தவறொன்றுமில்லை. பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதை எதிர்ப்பவர்கள் பிற்போக்குவாதிகள். இவர்கள் சாதாரண மனிதன் முன்னேற்றமடைவதைக் கண்டு பொறுமைப்படுபவர்கள்.

## உபதலைவர் மீதான வழக்கு

### 10-ந் திகதி தீர்ப்பு

காங்கேசன்துறை, வெள்ளி

காங்கேசனதுறை பட்டினசபை உபதலைவர் திரு. க. வைத்திலிங்கம் மீது காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜன்ட் திரு. தம்பிப்பிள்ளையினால் தொடரப்பட்ட வழக்கு இன்று மல்லாகம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தம்மீது பொய்க் குற்றம் சுமத்தி, சுப்பிரமணியம், மார்க்கண்டு ஆகிய இருவரையும் தமக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய தூண்டியதாக குற்றம்சாட்டி திரு க. வயித்திலிங்கம் மீது திரு. தம்பிப்பிள்ளை இவ் வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

விசாரணை முடிவில் இவ் வழக்கின் தீர்ப்பு இம்மாதம் 10-ம் திகதி வழங்கப்படுமென மாஜிஸ்திரேட் அறிவித்தார்.

## கோயில் ஐயர் கொலைவழக்கு

### 14-ந் திகதி விசாரணை

யாழ்ப்பாணம், சனி

இம்மாதம் 6-ம் திகதி எடுக்கட்கிழமை விசாரணைக்கு திங்த்துக் கொள்ளப்பட விருந்த 'உருத்திரபுரம் கோயில் ஐயர்' கொலை வழக்கை நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி. ஏப்ரல் 14-ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

முடிக்குரிய தரப்பில் வழக்கறிஞர் திரு. சிசில் குணவர்த்தன திரு. ஏ. ஏ. டி. சில்வாவின் உதவியுடன் இவ்வழக்கை நடத்த விருக்கிறார். இவ் வழக்கில் 32 பேர் சாட்சியமளிக்க இருக்கிறார்கள்.

இவ்வழக்கில் உருத்திரபுரம் பிள்ளையார் கோயில் ஐயர் காசிலிங்க சர்மாவை, முத்தர் வேலுப்பிள்ளை, பசுபதி, காலஞ்சென்ற ஐயரின் மனைவி கோகிலாம்பாள் ஆகியோர் கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

1-வது எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு. ஏ. அமிர்தலிங்கம் திரு. ஆர். டி. சிவகுருவின் அனுசரணையுடனும்,2-வது எதிரிசார்பில் திரு. ரீ. சுணேசலிங்கம் திரு. எஸ். செல்லத்தம்பியின் அனுசரணையுடனும ஆஜராவார்கள். காலஞ்சென்ற ஐயரின் மனைவி கோகிலாம்பாள் சார்பில் ஆஜராவதற்கு திரு. ரீ. எஸ். ஆனந்த குமாரசாமி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## மாஸ்கோ—ரங்கூன் விமானசேவை

ரங்கூன், ஏப். 3

மாஸ்கோவுக்கும் ரங்கூனுக்குமிடையே இருமுக விமான சேவை ஒப்பந்தம் ஒன்று கைஎழுத்திடப்பட்டது.

கோண்டாவில் கொலைவழக்கு

## எதிரி விடுதலை

### சாட்சிமீது குற்றச்சாட்டு பத்திரம் தாக்கல்

யாழ்ப்பாணம், சனி

'கோண்டாவில் கொலை வழக்கு' நேற்றுக் காலை வட பகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச் டபிள்யு. தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது காலஞ்சென்றவரை எதிரிதான் அடித்தார் என்பதற்குச் சாட்சியமில்லை என நீதியரசர் ஜூரிகளிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து, எதிரி குற்றவாளி

(5-ம் பக்கம் பார்க்க)

## கோடிக்கரையிலிருந்து பாக்கு நீரிணையை நீந்துவர்

### மூவர் கலந்துகொள்வர்

யாழ்ப்பாணம், சனி

தென்னிந்தியாவிலுள்ள கோடிக்கரையிலிருந்து பாக்கு நீரிணையைக் கடந்து வல்வெட்டித்துறைக் கரையை அடையும் முயற்சியில் ஒரு பெண் உட்பட மூவர் இன்று காலை ஈடுபடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 7 மணிக்கு பாக்கு நீரிணையைக் கடக்கும் கோஷ்டியினர் ஒரு வள்ளத்தின் மூலம் கோடிக்கரையை நோக்கிப் புறப்பட்டனர் என்றும், இன்று அதிகாலையில் கோடிக்கரையை அக்கோஷ்டி அடையுமென்றும் தெரியவருகிறது.

பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் முயற்சியில் திருமதி அசிலின் டயஸ், திருவாளர்கள் மொறிஸ்மார்க், ஜோர்ஜ் வன்னியப்பா ஆகிய மூவரும் ஈடுபடுவார்கள். இவர்களுக்கு கொழும்பிலுள்ள இந்திய அரசாங்கப பிரதிநிதி அனுமதி வழங்கியுள்ளார்.

நீச்சல் வீரர்களான மு. நவரத்தினசாமியும், வி. எஸ். ஆனந்தனும் ஏற்கனவே பாக்கு நீரிணையை நீந்திக் கடந்திருப்பது தெரிந்ததே.

## கென்னடி அரங்கு

யாழ்ப்பாணம், சனி

பாஷையூர் சனசமூக நிலையத்தில் கென்னடி அரங்கொன்று திறக்கப்படவிருக்கிறது. இக் கென்னடிஅரங்கை நாளை இரவு முன்னாள் யாழ். மேயர் திரு. எம். ஜேக்கப் திறந்து வைப்பார். திறப்பு விழாவுக்கு திரு. ஏ. போல்ராஜ் தலைமை வகிப்பார். இவ் விழாவில் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## மண்ணெண்ணை குடித்து குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், சனி

புத்தூர் மேற்கைச் சேர்ந்த சின்னட்டி பரமன் என்பவரின் ஒன்றரை வயதுக் குழந்தை மண்ணெண்ணை குடித்ததினால் இறந்து விட்டது.

குழந்தையின் மரணம்பற்றி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம விசாரணை நடத்தினார்.

(6-ம் பக்கம் பார்க்க)

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திரமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

### மணிவாக்கு

பரிபூரணமான ஒழுக்கம் வேண்டுமென்பது வற்புறுத்தப்பெருவிடில், ஜனநாயகத்தின் அடிப்படையே தகர்ந்துவிடும்.

— ஆய்விண்ட் ஸ்கார்ட்


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams—EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருது-ஆண்டு பங்குனீ 22உ (4-4-64)


## கமக்காரர் சங்கடம்

வவனியா மாவட்டத்தைச் சேர்ந்த கமக்காரர்கள் அரசாங்க அதிபரிடம் ஒருமுக்கியமான புகார் தெரிவிக்கின்றனர்கள். சென்ற மகாபோகத்தில் விளைந்த நெல்லை உத்தரவாத விலைத்திட்டத்தின்படி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்திடம் கொடுத்து அதற்கான காசோலையைப் பெற்றுர்களாம். அந்தக் காசோலையை மாற்ற அவர்கள் பலநாட்கள் பலமைல்தூரம் நடந்தும் கூட்டுறவு வங்கியில் பணமில்லை என்று திருப்பி அனுப்பப்படுவதாகத், தெரிவித்துள்ளனர். இதனல் சம்பந்தப்பட்ட கமக்காரருக்கு எவ்வளவு கஷ்டநஷ்டமும் மனச்சங்கடமும் ஏற்படுமென்பதை விளக்கத் தேவையில்லை.

நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்காக கமக்காரர்களுக்கு உற்சாகமூட்டவே நெல் உத்தரவாத விலைத்திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனல் இந்தத்திட்டம் அமுல் செய்யப்படும் முறையும் இடையிலேயுள்ள பல 'பெருச்சாளிகள்' செய்யும் விஷமங்களும் கமக்காரர்களுக்கு உற்சாகமூட்டி உதவுவதற்குப் பதிலாக அவர்களுக்கு மனச்சங்கடத்தையும் பெருகஷ்டத்தையும் ஏற்படுத்துவதாகவே உள்ளதென்று தோன்றுகின்றது. வேறுபல கமக்காரர்கள் நெல் அறுவடை செய்து அதைக் கொடுக்கத் தயாராக இருந்தும், குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கம் அதை வாங்கிக் கொள்ள மறுக்கின்றதாம்.

நேர்மாருகவும் மறைமுகமாகவும் கமக்காரர்களுக்குப் பலபல உபத்திரவம் செய்யப்படுவதாகவும் இத்துதுகோஷ்டியினர் தெரிவித்துள்ளனர். இதன் பயனுக கமக்காரர்கள் தனிப்பட்ட வர்த்தகரிடம் குறைந்த விலைக்குத் தங்கள் நெல்லை விற்கவேண்டி இருப்பதாயும் தனிப்பட்ட வர்த்தகர்களும் இலாகா அதிகாரிகளும் கூட்டுசேர்ந்து கொண்டு விளையாடி, கமக்காரர்களைச் சுரண்டுவதாகவும் சொல்லப்படுகின்றது. வவனியா மாவட்டத்தில் மட்டுமல்ல, இதே போல் வேறுபல இடங்களிலும் நடப்பதாகவும் பல புகார்களுண்டு. இதில் ஓரளவும் உண்மையாயின் அது உத்தரவாதவிலைத் திட்டத்தையே கேலிக்கூத் தாக்குவதுடன் உள்நாட்டில் நெல்உற்பத்தியைப் பெரிதும் பாதிப்பதாகவுமிருக்கும்.

புசல் ஒன்றுக்கு ரூ. 12 வீதம் உத்தரவாத விலை கொடுத்து வாங்க அரசாங்கத்தின் பணநிலை இடங்கொடுக்கவில்லை என்றும், அதனல் விலையைக் குறைக்கவோ அல்லது இத்திட்டத்தையே மாற்றவோ உத்தேசமிருப்பதாயும் பல வதந்திகள் கிளம்பியுள்ளன. இதில் ஏதும் உண்மையுண்டா? அரசாங்கம் இதைச் சந்தேகத்துக்கிடமின்றித் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளது. உத்தரவாத விலை கொடுப்பதாக ஏட்டளவில் கூறிவிட்டு, பின்னர் விவசாயிகளை ஏமாற்றத்துக்கு உள்ளாக்குவது அரசாங்கத்துக்கு அழகல்ல. அவர்களால் இத்திட்டத்தை நடத்தி வைக்க முடியாமல் அதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு இத்திட்டத்தை மாற்றி அமைப்பதே அதிக நாணயமாகும்.

கூட்டுறவு வங்கியிலே காசோலையை மாற்றப் பணமில்லை என்பது உண்மையாயின் அது ஒரு வெட்கக்கேடு. இந்த இயக்கத்தின் நற்பெயருக்கு இழுக்காவதுடன் இந்த இயக்கத்திலே பொதுமக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் செய்வதாகவுமிருக்கும். கூட்டுறவு இயக்கத்தைப் பலப்படுத்த முயலுவதாகக் கூறும் அரசாங்கம் இவ்வித நிலைமை ஏற்பட அனுமதிக்கக்கூடாது. இது மிக முக்கிய விஷயம். இதில் உடனடியாகக் கவனம் செலுத்தி தக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. உள்நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்கும் பணியில் ஈடுபட்டுள்ள கமக்காரர்களின் சங்கடங்களை நீக்கினுல்தான் இங்கு நெல் உற்பத்தி அதிகரிக்கவும் நமது செல்வம் பாதுகாக்கப்படவும் கூடும்.

# மந்திரிசபையில் சேர சமசமாஜிகள் விருப்பம்

## ஆனல் கொள்கைத் திட்டத்தை சுதந்திரக்கட்சி ஏற்கவேண்டும்

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில், இடதுசாரிப்பாதையில் செல்வதற்குத் தயாராக இருந்தால் தான் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்துக்கு இடதுசாரி ஐக்கிய முன்னணி ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்கும். லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மகாஜன எக்ஸத் பெரமுன ஆகிய மூன்று கட்சிகளையும் கொண்ட இடதுசாரி ஐக்கிய முன்னணியின் மத்திய இணைப்புக் கமிட்டி, அரசாங்கத்துக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் அளிப்பதென சமீபத்தில் ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தின் உள்ளர்த்தம் 'இடதுசாரிப் பாதையில் அரசாங்கம் செல்வதானல் ஆதரவு அளிப்பது' என்பதுதான்!

### சமசமாஜக்கட்சி ஆதரிக்கத்தயார்

வாழ்க்கைச் செலவை உடனடியாகக் குறைக்கவும், லஞ்சம், ஊழலை ஒழிக்கவும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அரசாங்கம் ஒப்புக்கொண்டால், திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் தலைமையில் உள்ள அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவும் மந்திரிசபையில் சேர்ந்து பதவியேற்கவும் லங்கா சமசமாஜக்கட்சியின் தலைமைப்பீடம் தயாராக இருக்கிறதென்பது அரசியல் அவதானிகளின் நம்பிக்கை. அடுத்த பொதுத் தேர்தலுக்கு இன்னும் பதினைந்து மாதங்களிருக்கின்றன. இந்த இடைக்காலத்தில், லங்கா சமசமாஜக்கட்சியும்ஸ்ரீலங்காசுதந்திரகட்சியும் ஏற்றுக்கொள்ளும் பொதுக்கொள்கை வேலைத்திட்டத்தை அமுல் நடத்திவிடவேண்டுமென சமசமாஜக்கட்சி விரும்புவதாலேயே மந்திரிசபையில் சேருவதற்கு சமசமாஜக்கட்சி தயாராக இருக்கிறது.

பொதுக்கொள்கைத் திட்டத்தின் கீழ் அரசாங்கத்துடன் இடதுசாரி ஐக்கியமுன்னணியைச் சேர்ந்த இதர கட்சிகளையும் ஒன்ருக்கொண்டு வருவதற்கும் சமசமாஜக்கட்சி விரும்புகிறது. அடுத்த பதினைந்து மாதகாலத்திலும் இடதுசாரிக் கொள்கைத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு இடதுசாரித் தொழிற்சசங்கங்களினதும் ஆதரவை பெற்றுக்கொள்வதுதான் இதன் நோக்கமாகும்.

### மத்தியகமிட்டியில் எதிர்ப்பு

லங்கா சமசமாஜக்கட்சியின் மத்திய கமிட்டிக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றபொழுது வாழ்க்கைச்செலவைக் குறைப்பதற்கு பொதுவான திட்டத்தை ஏற்றுக்கொள்ளாதவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன சேர்ந்து உழைப்பதைக் கமிட்டியின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் எதிர்த்தனர்

இவர்கள் இவ்வாறு வாழ்க்கைச்செலவு உயர்வை மட்டும் குறிப்பாக வைத்துக்கொண்டு எதிர்த்ததற்கு கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள மத்திய தர வகுப்பினரின் தொழிற்சங்கமாகிய இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தின் பொதுக் காரியதரிசியான திரு. பாலாதம்பு, வாழ்க்கைச்செலவுதான் நடுத்தர வகுப்புக்களைப் பெரிதும் பாதிப்பதெனக் கருதுவதேயாகும்.

மத்தியதர வகுப்பினருக்காக வாழ்க்கைச் செலவு உயர்வுப் பிரச்னையை மட்டும் கருத்தில்கொண்டு கவனிப்பதற்காக திரு. பாலாதம்புவையும் அவரது ஆதரவாளர்களையும் சமசமாஜக்கட்சித் தலைவர்கள் கண்டித்தனராம்.

குறுகிய நோக்கத்தை விடுத்து, நாட்டின் நலனையும் கருதி விரிந்த முறையில் பிரச்னைகளைக் கவனிக்க வேண்டுமென்று திரு. பாலா தம்புவையும் அவரது ஆதரவாளர்களையும் டாக்டர் என். எம். பெரேராவின் தலைமையிலுள்ள குழுவினர் கேட்டுக் கொண்டனராம். இடதுசாரி ஐக்கியமுன்னணியின் கொள்கைத் திட்டம் நடுத்தர வகுப்பினரின் வாழ்க்கைச் செலவுப் பிரச்னையை மட்டுமல்ல நாட்டின் அரசியல் பொருளாதார கலாசாரப்பிரச்னைகள் முழுவதையும் உள் அடக்கியது என்று டாக்டர் என். எம். பெரேரா கூறியதாகத் தெரிகிறது.

இடதுசாரி ஐக்கியமுன்னணியின் கொள்கைத் திட்டத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கொள்கையளவில் ஏற்று உடனடியாக அதை செயல்படுத்துவதில் ஈடுபட்டால் அது பெரும் வெற்றியாக முடியுமென்றுடாக்டர் என். எம். தெரிவித்ததாகச் சொல்லப்படுகிறது.

அந்நியருக்குச் சொந்தமான தோட்டங்களையும் இலங்கையருக்குச் சொந்தமான பெரிய தோட்டங்களையும் உடனடியாக தேசியமயமாக்கவேண்டுமென இடதுசாரி ஐக்கிய முன்னணி விரும்புவதாகவும் ஆனல் இந்த யோசனையை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி காலவரையறையின்றி ஒத்திவைத்துள்ளதாகவும் அறியப்படுகிறது. அந்நியருக்குச் சொந்தமான தோட்டங்களையும், வங்கிகளையும், வர்த்தகத்தையும் குறிப்பிட்ட ஒரு கால எல்லைக்குள் தேசியமயமாக்குவதற்கு ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சி கொள்கையளவில் ஒப்புக்கொண்டாலே அரசாங்கத்துக்கு இடதுசாரி ஐக்கிய முன்னணி ஒத்துழைப்பு அளிக்கும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இடதுசாரி ஐக்கியமுன்னணிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையில் ஒத்துழைப்பு அடிப்படையில் உடன்பாடு ஏற்பட்ட பின்னரே அரசாங்கத்தில் இடதுசாரி முன்னணி சேருவது பற்றிய பேச்சுவார்த்தைகள் நடைபெறும்.

— ஒரு நிருபர்

# ஜாகர்த்தா மகாநாட்டுக்கு பீலிக்ஸ் போகமாட்டார்

கொழும்பு, வெள்ளி

இம்மாதம் 10-ம் திகதி ஜாகர்த்தாவில் நடைபெறவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் வெளிவிவகார மந்திரிகளின் ஆயத்த மகாநாட்டில் உணவு, விவசாயமந்திரியும் உதவி பாதுகாப்பு வெளிவிவகார மந்திரியுமான திரு பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா கலந்து கொள்ள மாட்டார் என்று தெரிகிறது.

இந்த மகாநாட்டில் திரு. பீலிக்ஸ் டயஸ் கலந்துகொள்வாரென முன்பு எதிர்பார்க்கப்பட்டது. இவருக்குப் பதிலாக இப்பொழுது பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் ஆசிய விவகாரப்பகுதி அதிபர் திரு. ஜி.பீரிஸும், இந்தியாவிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் திரு. ஷேர்லி அமரசிங்காவும் கலந்து கொள்வர் எனத் தெரிகிறது.

ஜாகர்த்தாவில் நடைபெறவிருக்கும் ஆசிய ஆபிரிக்க வெளிவிவகார மந்திரிகளின் ஆயத்த மகாநாட்டிற்காக விடுக்கப்பட்ட அழைப்பை இதுவரை 18 நாடுகள்தான் ஏற்றுக் கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

நடுநிலைமை நாடுகளின் இரண்டாவது மகாநாடு இவ்வருடம் அக்டோபர் மாதத்தில் நடைபெறவிருக்கிறது, இதற்குமுன் ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் இரண்டாவது மகாநாட்டை நடத்துவதற்கு ஜாகர்த்தா ஆயத்த மகாநாட்டை சீனவும் இந்தோனேஷியாவும் பயன்படுத்தக் கூடுமென ராஜீய வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

## ஐயாறன் எழுதுவது

இலங்கையிலே பௌத்த பிக்குகள் மொத்தம் எவ்வளவு பேர் இருக்கிருர்களாம் தெரியுமா? சுமார் 15 ஆயிரம். சில வருடங்களுக்கு முன் இவர்கள் எண்ணிக்கை சுமார் 20 ஆயிரம்வரை இருந்தது.

சமீபகாலமாக சர்வகலாசாலையில் சேர்ந்து பட்டம் பெற்ற பிக்குகள், பின்னர் மஞ்சள் உடையைக் களைந்து குடும்பஸ்தர்களாகிருர்களாம். வேறு காரணங்களாலும், அவர்கள் துறவி வேடத்தைத் துறந்துவிடுவதாகவும் இதைப்பற்றி அரசாங்கம் விசாரித்து, அவர்கள் துறவைத் துறக்காமல் தடுக்கவேண்டுமென்றும் மல்வத்தை குருபீடத்தைச் சேர்ந்த மகாநாயக தேரோ ஒரு கூட்டத்தில் கூறியிருக்கின்ருர்.

இம்மத விஷயத்தில் அரசாங்கம் என்ன செய்யமுடியும்? குருபீடங்கள் சேர்ந்து இதில் தக்க நடவடிக்கை எடுக்கமுடியாதா?

* * *

பிக்குகளுக்கு அரசியலில் தலையிட உரிமையில்லை என்கிருர் மல்வத்தை பீடாதிபதி. அரசியலும் வேண்டாம், குடும்பப்பற்றுகளும் வேண்டாமென்று ராஜபோகத்தையும் விட்டுவிட்டுத் துறவுபூண்டார் புத்தர் பெருமான்.

ஆனல் இங்கோ சில பிக்குகள் அரசியலில் பகிரங்கமாக ஈடுபடுகின்ருர்கள். இலங்கையில் சர்வாதிகாரம் ஏற்படவேண்டுமென்று கூறி ஒரு அறிக்கையையும் வெளியிட்டார் ஒரு பிக்கு. பெரிய பண்டாரநாயகாவின் கொலைக்காக ஒரு பிக்கு தூக்குத்தண்டனை பெற்ருர். மற்ருெருவர் ஜன்மதண்டனை அனுபவித்துவருகின்ருர். இதையெல்லாம் மனதில் வைத்துத்தான் மல்வத்தை பீடாதிபதி அவ்விதம் கூறியிருக்கவேண்டும்.

ஆனல் இதுவோ ஜனநாயகம். அரசியலில் தலையிடத் தங்களுக்கு உரிமையுண்டென்று பிக்குகளும் சட்டம் பேசலாம். அதை மறுக்க யாரால் முடியும்.

குருபீடங்களுக்கு அடங்கி அதன் கெட்டுத்திட்டங்களுக்கு உட்பட்டவர்களாகவே பிக்குகள் அனைவரும் இருப்பதாயின் இந்த அவலநிலை ஏற்படாது. புத்ததர்மத்தை மீறி அரசியலில் தலையிடும் பிக்குகளை யார் தடுக்கமுடியும்?

நல்லவேளை புதிய மல்வத்தை குருபீடம், விரிந்த மனப்பான்மையுடன் துணிந்து பேசுகின்ருர். கண்டிப்பு செய்தால் பிக்குகள் எண்ணிக்கை குறையலாம். ஆனல் பிக்குகளின் வளர்ச்சி, பிக்குகளின் எண்ணிக்கையிலா அடங்கியிருக்கிறது. அந்தத் தர்மப்படி தாங்கள் நடப்பதுடன், மற்றவர்களையும் நடக்கும்படி செய்வதில்தான் அதன் உண்மை மேன்மையும் வளர்ச்சியும் அடங்கியிருக்கும்.

எவ்வளவு சீக்கிரத்தில் இவ்வித சீர்திருத்தம் வருகிறதோ அவ்வளவு பௌத்த சமயத்துக்கும் நாட்டுக்கும் நல்லது. மொழி, இனம் முதலிய பிரச்னைகளும் சுமுகமாகத் தீரவும் கூட இதனல் வழிபிறக்கலாம்.

* * *

கொழும்பில் ஒரு சோதிடராம். அவருக்குப் பத்து குழந்தைகள். வருமானமனைத்தையும் குடிப்பதிலும் கஞ்சாவிலும் செலவழிப்பாராம். குடிவெறியில் மனைவியையும் குழந்தைகளையும் அடித்து விரட்டுவாராம்.

குடிவெறியில், ஒருசமயம் திராவகத்தைத் தன் பெண் மீது வீசிக் காயப்படுத்தினராம். இருமுறை தற்கொலை செய்ய முயன்றும் பயனில்லை.

சென்ற செவ்வாயன்று சிவனொளிபாத மலைக்குச் சென்று, குடிவெறியுடன் திரும்பி, பெண்டு பிள்ளைகளை

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

விரட்டிவிட்டு, வீட்டில் தூக்கிட்டுக்கொண்டு மாண்டதாக அவர் மனைவி சாட்சியம் கூறினராம்.

"அந்த மனிதன் ஒழிந்தது உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சிதானே?" என்று மரணவிசாரணை அதிகாரி கேட்டதற்கு மனைவி தலைகுனிந்து சற்றே சிரித்தாராம். பாவம்! கோள்களிடமிருந்தாவது தப்பிவிடலாம். மது அரக்கனின் பிடியில் சிக்கியவர் தப்புவது இலேசா?

* * *

அண்ணுமலையமர்ந்தார் ஆரூருள்ளார் அளப்பூரார் அந்தணர்கள் மாடக்கோயில், உண்ணு நிலையார் உமையாளோடும் இமையோர் பெருமானுர் ஒற்றியூரார், பெண்ணுகடத்துப் பெருந்தூங்கானை மாடத்தார் கூடத்தார் பேராவூரார், விண்ணோர்களெல்லாம் விரும்பியேத்த வீழிமிழலையே மேவினரே.

— திருநாவுக்கரசர்

# "ஏடன் பிரிட்டிஷ் தளங்கள் அகற்றப்படவேண்டும்"

## பாதுகாப்பு சபையில் ஏமன் பிரதிநிதி வற்புறுத்து

### பிரிட்டன் மீது ரஷ்யா, ஈராக், ஐக்கிய அரபு குடியரசு தாக்குதல்

நியூயோர்க், ஏப்ரல் 3

**ஏமனில் பிரிட்டிஷ் விமானங்கள் தாக்குதல் நடத்தியது குறித்து ஆலோசிக்க பாதுகாப்புசபையின் அவசரக்கூட்டம் நேற்றிரவு நடைபெற்றபோது ரஷ்யா, ஐக்கியஅரபியக் குடியரசு, ஈராக் ஆகிய நாடுகள் பிரிட்டன்மீது பலத்த கண்டனம் தெரிவித்தன.**

ஏமன் பிரதிநிதி, சபையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தாக்குதல்பற்றி விளக்கினர். ஏமன் பிராந்தியத்திலிருந்தும் ஏமன் தளத்திலிருந்தும் பிரிட்டிஷ் துருப்புக்கள் வாபஸ்பெற வேண்டும் என அவர் வற்புறுத்தினர். ஏடனிலுள்ள பிரிட்டிஷ் தளம் ஏமனின் பாதுகாப்புக்கு அபாயகரமாய் விளங்குவதாயும் அவர் கூறினர். பிரிட்டிஷ் குண்டுவீச்சில் 25பேர் கொல்லப்பட்டதற்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினர்.

பிரிட்டிஷ் பிரதிநிதி திரு. பெட்ரிச்டீன் பேசுகையில் இத் தாக்குதலை நடத்த அரசாங்கம் உத்தரவிட்டது உண்மையேயென்றும் ஆனல் தற்பாதுகாபபுக்காகவே இவ்விதம் செய்யப்பட்டதாயும் கூறினர். ஏமானிய விமானங்கள் தென் அராபியக் கூட்டரசுமீது உரிமை மீறிப் பறந்துவருவதற்குப் பதில் நடவடிககையாகவே இவ்வாறு செய்யப்பட்டதென்றும் அவர் கூறினர். ஆனல் சேதம்பற்றி ஏமன் கூறிய விபரங்களை அவர் மறுத்தார்.

ரஷ்யப் பிரதிநிதி பேசுகையில் பிரிட்டனின் நடவடிக்கை காட்டுமிராண்டித்தனமானது. என்றும் ஏமன் சுதந்திரத்திற்கு பிரிட்டிஷ் நடவடிக்கை அபாயமாக விளங்குகிறதுஎன்றும் கூறினர்.

ஐக்கியஐராபியக் குடியரசு, ஈராக் நாட்டுப் பிரதிநிதிகள் ஏமனின் குற்றச்சாட்டை ஆதரித்துக் கருத்துத் தெரிவித்தனர்

பிரிட்டனின் நடவடிக்கை மன்னிக்க முடியாததென்றும் ஐ. நா. சாஸனத்திற்கு மாறுனது என்றும் ஈராக் பிரதிநிதி கூறினர்.

பிரிட்டன் ஆக்கிரமிப்புச் செய்திருப்பதாய் ஐக்கிய அராபியக் குடியரசுப் பிரதிநிதி குறிப்பிட்டார்.

பாதுகாப்புசபைக் கூட்டம் மேலும் விவாதம் நடத்துவதற்காக இன்றுவரை ஒத்திவைககப்பட்டிருக்கிறது.

---

## இரண்டரை லட்சம் அகதிகள்

புதுடில்லி, ஏப். 3

மேற்கு வங்காளத்துக்கு மட்டும் இதுவரை ஒன்றரை லட்சம் அகதிகள் வந்திருப்பதாயும், தினம் ஒன்றுக்கு 4000 பேர் வீதம் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வந்துகொண்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. அஸ்ஸாம், திரிபுரா உட்பட மொத்தம் இரண்டரை லட்சம் அகதிகள் வந்திருப்பதாய் மேலும் அறிவிக்கப்பட்டது.

---

## ராதாகிருஷ்ணன் வாழ்த்து

புதுடில்லி, ஏப்ரல் 3

செனகல் சுதந்திரதினத்தை முன்னிட்டு அந்நாட்டு ஜனதிபதிக்கு இந்திய ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறர்.

---

## ரயில் விபத்து

புதுடில்லி, ஏப். 3

ராஞ்சி—ஹௌரா எக்ஸ்பிரஸ் ரயிலுக்கு ஏற்பட்ட ஒரு விபத்தின்காரணமாக 17 பிரயாணிகளுக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

---

## உருகுவேயில் மாஜி ஜனதிபதி

பிரேஸிலியா, ஏப்ரல் 3

நாட்டை விட்டு வெளியேறிய பிரேஸில் ஜனதிபதி இப்போது உருகுவேக்குச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. புரட்சித் துருப்புக்கள் தலைநகரை பிடிப்பதற்குச் சற்று முன்புதான் அவர் வெளியேறியதாகச் சொல்லப்படுகிறது பிரேஸிலில் அதிபர் பதவி காலியாய் இருப்பதாயும், இடைக்கால அதிபராக காங்கிரஸ் தலைவர் திரு. மஜலி பதவி வகிப்பதாயும் ஒரு அறிவிப்பு கூறுகிறது. புதிய ஜனதிபதியை பாராட்டி அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன் ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறர்.

---

## ரஷ்யாவின் வான்வெளிகப்பல்

மாஸ்கோ, ஏப்ரல் 3

ரஷ்யா பல கட்ட ராக்கெட்டைக் கொண்ட வான்வெளிக் கப்பல் ஒன்றைச் செலுத்தியிருக்கிறது. வானவெளிப் பயணம்பற்றிய ஆராய்ச்சியின் ஒரு அம்சமாகவே இது அனுப்பப்பட்டுள்ளது.

---

## சைப்ரஸ் மத்தியஸ்தர்

நிக்கோஸியா, ஏப்ரல் 3

சைப்ரஸில் ஐ. நா. மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டிருக்கும் சகாரி தியோமியா நேற்று நிக்கோஸியா வந்து சேர்ந்தார். அங்குள்ள ஐ. நா. படைகளின் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் கியானி அவரை வரவேற்ருர்.

---

## பிரான்ஸ் ஆயுத உதவியளிக்காது

கோலாலம்பூர், ஏப்ரல் 3

இந்தோனேஷியாவுக்கு பிரான்ஸ், மேற்கொண்டு ஆயுதம் எதையும் விற்காது என மலேஷியாவில் பிரெஞ்சு தூதராக இருக்கும் பியர் அந்தோனியோ கூறினர். இதுசம்பந்தமாக தற்போதய ஒப்பந்தம் முடிந்தவுடன் அது புதுப்பிக்கப்பட மாட்டாது என்றும் அவர் கூறினர்.

---

## பத்திரிகை கண்டனம்

பொன், ஏப்ரல் 3

பாரதத்திற்கும், நேருவுக்கும் எதிராக பாகிஸ்தான் செய்துவரும் பகைமைப் பிரசாரத்தை மேற்கு ஜெர்மன் பத்திரிகையொன்று கண்டித்திருக்கிறது.

---

## யானைகள் கடத்தப்பட்டன

ஜோர்ஹாட், ஏப்ரல் 4

மூன்று யானைகளை அவற்றின் பாகர்களுடன் காகா கலகக்காரர் கோஷ்டி ஒன்று கடத்தி சென்றதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

---

# கதிர்காம கடைத்தெருக்கள் அகற்றப்படும்

## புதிய இடத்தில் வர்த்தக ஸ்தாபனங்கள் இயங்க ஏற்பாடு

கொழும்பு, வெள்ளி

கதிர்காமம்புனித க்ஷேத்திரத்திலுள்ள கடைத்தெருவை அகற்றும் வேலை அடுத்த வாரம் ஆரம்பமாகும். மாணிக்க கங்கையின் மறுகரையில் 80 வர்த்தக நிலையங்களுக்கான கட்டிடத்தை அமைக்கும் வேலைகளை வீடமைப்புஇலாகா மேற்கொள்ளும் சமயத்தில் இது நடைபெறும்.

கடை, ஹோட்டல், பூவிற்பனை நிலையம் ஆகியவற்றை இங்கு நடத்தும் வர்த்தகர்களுக்கு புதிய கட்டிடங்களில் இடம் ஒதுக்கப்படும்.

புனித நகரிலிருந்து கடைத்தெருவை அகற்றுவதற்கு மொத்தம் 19 லட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்படுகிறது.

வர்த்தகத்தில் ஈடுபடாமல் இங்கு வசிக்கும் மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்காகவும் 16 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

யாத்திரீகர்களுக்கான விடுதிகள் மட்டுமே புதிய நகரில் செய்யப்படும் ராமகிருஷ்ண மிஷன் பராமரித்து வரும் மடங்கள் தொடர்ந்திருக்க அனுமதிக்கப்படும்

---

# நடைபாதை வியாபாரிகளின் கடைகள் நொறுக்கப்பட்டன

## பொரளையில் பொலிஸார் நடத்திய அமளிதுமளி

கொழும்பு, வெள்ளி

பொரளை பொலிஸ நிலையத்தைச் சேர்ந்த ஒரு பொலிஸ்காரருக்கும், ஒரு நடைபாதை வியாபாரிக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பு, பொரளையில் அமளிதுமளியை ஏற்படுத்தியது.

சுமார் 40 நடைபாதை வியாபாரக் கொட்டில்கள் நொறுக்கப்பட்டன. படம் பிடிக்க முயன்ற ஒரு பத்திரிகை ப்புகைப்படக்காரர் பொலிசாரினல் தாக்கப்பட்டார்.

ஸ்தல எம். பி. ஸ்ரீமதி விவியன் குணவர்த்தன உடன் சென்று, நடைபாதை வியாபாரிகளுக்கெதிராக பொலிஸாரின் நடத்தை பற்றி பொலிஸில் புகார் செய்தார்.

ஒரு நடைபாதை வியாபாரியும், ஒரு பொலிஸ்காரரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தனரென்றும், இதைத் தொடர்ந்து 15 பொலிஸார் விரைந்துவந்து அவர்களின் கடைகளை நொறிக்கினரென்றும் சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் கூறினர்.

ஸ்ரீமதி விவியன் குணவர்த்தன எம். பி. ஸ்தலத்திற்கு வந்த போது பொலிஸார் மறைந்துவிட்டனர் என்றும் அவர் கூறினர்.

---

## ஆலயமும் வித்தியாலயமும்

### சாவகச்சேரி எம் பி உரை

சாவகச்சேரி, வெள்ளி

"ஆத்மா லயப்பட ஆலயமும் அறிவு லயப்பட வித்தியாலயமும் நாட்டின் பலவிடங்களிலும் சிறந்த முறையில் பரிபாலிக்கப்படவேண்டும். அரசினர் பொறுப்பேற்றபின் வித்தியாலயங்களைப் பரிபாலித்தல் பெற்ருேரின் முக்கிய கடமை. அறிவு விருத்தியாகும் கோயில், வித்தியாலயம்."

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு வி.என். நவரத்தினம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி பெற்ருேர்-ஆசிரியர் சங்க வருடாந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

இக்கூட்டம் கல்லூரி மண்டபத்தில் அதிபர் திரு. ஏ. கே. கந்தையா தலைமையில் நடைபெற்றது.

திரு. நவரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர் பகுதிக்கும் பங்கீட்டு முறையில் ஒதுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க இக் கல்லூரிக்கு மாத்திரம் விசேஷமாக பத்து அறைகள்கொண்ட கட்டிடம் அமைப்பதற்கு முப்பத்துமூவாயிரம்ரூபாய் அரசாங்கத்தால் ஒதுக்கப்படடுள்ளது. இவ்வேலை ஒரு மாதத்திற்குள் ஆரம்பமாகும்."

---

## பாலத்தின் கீழ் குண்டுகள்

ஜம்மு, ஏப்ரல் 3

ஜம்மு-தான்கோட் ரோடில் லகன்பூர் அருகே ஒரு பாலத்தின் அடியில் 3 குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. பாகிஸ்தான் நாசவேலைக்காரர்கள் இந்தக் குண்டுகளை அங்கு வைத்திருப்பர் எனக்கருதபபடுகிறது.

---

## மேல் சபை தலைவர் தெரிவு

சென்னை, ஏப்ரல் 3

சென்னை மேல் சபைக்கு புதிய அக்ராசனர் தேர்தல் வருகிற 23-ம் திகதி நடைபெறும். காங்கிரஸ் அபேட்சகராக திரு. எம். ஏ. மாணிக்க வேலு நிறுத்தப்படலாமெனக் கூறப்படுகிறது.

---

## அயூபுக்கு ஆபரேஷன்

ராவல்பிண்டி, ஏப்ரல் 3

பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கானுக்கு இங்குள்ள ராணுவ ஆஸ்பத்திரி ஒன்றில் சிறுநீர்ப்பை ஆபரேஷன் நடைபெற்றது.

---

## "கம்யூனிஸம் தான் ஒரே வழி"

### உதவிநிதிமந்திரிகூற்று

களனி, வியாழன்

"ஒரு நாடு பொருளாதார வளர்ச்சியுடைய வேண்டுமானல் அது கம்யூனிஸத்தைக் கைக்கொள்ள வேண்டும். இலங்கையைப் போன்ற ஒரு நாட்டுக்கு கம்யூனிஸ ஆட்சி முறையே சிறந்தது" என்று உதவி நிதிமந்திரியும் மகார எம். பி.யுமான திரு. எஸ். கே. கே. சூரியாராச்சி ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

பலபொலயஸ ஸி தேரோ பேசுகையில் அரசாங்கம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டதென்றும் ஆட்சிபுரிய முடியாவிட்டால் ராஜினமாச் செய்துவிட்டு வெளியேறுவதே சரியான செய்கையென்றும் கூறினர்.

---

## சுதந்திரக்கட்சிக் கூட்டம் ஒத்திவைப்பு.

கொழும்பு, வெள்ளி

அடுத்த சனிக்கிழமை நடைபெறவிருந்த கொழும்புக் கிளையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விசேஷகூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

---

"ஐ நா. வில்

# சக்ளாவின் விவாதத்திற்கு பதிலளிக்க முடியவில்லை"

## பாகிஸ்தான் அசெம்பிளியில் அவாமி லீகர் கண்டனம்

ராவல்பிண்டி, ஏப்ரல் 4

காஷ்மீர் சம்பந்தமாக பாகிஸ்தான் தேசிய அசெம்பிளியின் இரகசியக்கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது.

அவாமி லீக் கட்சியைச் சேர்ந்த திரு. ஹுசெய்ன் மன்சூர் அப்போது பேசுகையில், பாதுகாப்புச் சபையில் இந்திய கல்வி மந்திரி சக்ளாவின் வாதத்தை மறுக்க பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி பூட்டோவினல்முடியவில்லையெனக் கூறினர்.

சபாநாயகர் அவரது பேச்சை நிறுத்தும்படி கூறியபின்பும் தொடர்ந்து அவர் பேசுகையில் திரு. பூட்டோ வெறுங் கையுடனேயே திரும்பியிருக்கிருரெனக் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் பேசியபோது காஷ்மீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு முன், முதலில் பாகிஸ்தானில் ஐக்கியத்தையும் ஸ்திரத்தன்மையையும் ஏற்படுத்துமபடி கேட்டுக் கொண்டார்.

---

# ஷேக் அப்துல்லா 7-ந் திகதி விடுதலையாவார்?

ஜம்மு, ஏப்ரல் 3

ஷேக் அப்துல்லா வருகிற 7-ந் திகதி விடுதலையாவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தாம் விடுதலையானபின் காஷ்மீர் ராஜ்யத்திலும், இந்தியாவின் மற்றப பகுதிகளிலும் வகுப்பு ஒற்றுமைக்காகத் தொடர்ந்து பாடுபடப்போவதாய் ஷேக் அப்துல்லா கூறினர்.

வகுப்பு ஒற்றுமையில் தமக்குள்ள தளராத நம்பிக்கையை ஷேக் அப்துல்லா மீண்டும் ஊர்ஜிதம்செய்தார்.

ஷேக் அப்துல்லா மிகவும் உற்சாகத்துடன் நீதிமன்றத்திற்கு வந்தார். நல்ல ஆரோக்கியத்துடன் அவர் இருக்கிருர்.

கடந்த மூன்று மாதமாக காஷ்மீரில் வகுப்பு ஒற்றுமை நிலவிவருவது குறித்து அப்துல்லா மகிழ்ச்சியும், திருப்தியும் தெரிவித்தார், இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் சில இடங்கள் வகுப்புத்தொல்லையால் பாதிக்கப்பட்டபோது, காஷ்மீரில் வகுப்பு சௌஜன்யம் நிலவியது திருப்திக்குரிய விஷயம் என அவர் குறிப்பிட்டார்.

## விளைபொருள் இன்சூரன்ஸ்

கொழும்பு, வெள்ளி

அடுத்துவரும் பெரும்போக சமயத்தில் பெருந்தொகையான நெற்காணி விவசாயிகள் விளைபொருள் இன்சூரன்ஸ் நன்மைகளை அடைவார்கள் என அறிவிக்கப்படுகிறது. இதற்கான பலன் 3 லட்சம் ஏக்கருக்கு விஸ்திரிக்கப்பட்டிருக்கிறது.

---

## திறமையான அரசாங்கம்

### டாக்டர் என். எம். யோசனை

தொணியகலை, வியாழன்

"நாட்டை ஆளக் கூடிய திறமைவாய்ந்த ஒரு கட்சியைத் தெரிவு செய்யவேண்டியது மக்கள் பொறுப்பு இந்த சந்தர்ப்பம் அடுத்த பொதுத் தேர்தலில் மக்களுக்கு கிடைக்கும்" என்று லங்கா சமசமாஜக் கட்சித் தலைவரும் எட்டியாந்தோட்டை எம். பி.யுமான டாக்டர் என். எம். பெரேரா ருவான்வலை மத்திய மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

மக்களின் பொது உரிமைகளும் ஜனநாயக உரிமைகளும் இன்று ஆபத்தான நிலையிலிருப்பதாகவும் இவற்றைப் பாதுகாக்க மக்கள் தயாராக இருக்க வேண்டுமென்றும் டாக்டர் என் எம். கூறினர். எளிய மக்களைத் தொந்தரவு செய்யும் எந்த முயற்சியையும் எதிர்த்து இயக்கம் நடத்த இடதுசாரி ஐக்கிய முன்னணி தயாராக இருக்கிறது என்றும் அவர் சொன்னர்.

இன்றைய பிரச்னைகளுக்கெல்லாம் இந்த அரசாங்கமே காரணம் என்று கூறிய டாக்டர் பெரேரா பிரச்னைக்கு மேல் பிரச்னைகளை அரசாங்கம் உண்டாக்கிக் கொண்டிருக்கிறதென்றும் இந்த அரசாங்கத்துக்கு திறமையும் சக்தியுமில்லையென்பதற்கு இதுவே சான்று எனவும் கூறினர்

## "பிலிப்பை சேர்க்கவும்"

### அரசாங்கத்துக்கு பிக்கு யோசனை

வத்தளை, வியாழன்

பண்டாரநாயகாவுக்கு விரோதமான சக்திகளை நீக்கிவிட்டு எம். ஈ. பி. தலைவர் திரு. பிலிப்குணவர்த்தனவை எடுத்து ஸ்திரமான அரசாங்கம் அமைக்கவேண்டும் என்று வண. பொயாகம தம்மரத்தின மகா தேரோ ஒருபொதுக் கூட்டத்தில் பேசுகையில் அரசாங்கத்துக்கு யோசனை கூறினர்.

திரு. பிலிப் குணவர்த்தன போன்ற நேர்மையான சிங்கள தலைவர் அரசாங்கத்தில் இருந்தால்தான் சிங்கள கலாசாரமும் மதமும் பாதுகாக்கப் படமுடியும் என்று தேரோ கூறினர். சர்வாதிகாரத்தை ஏற்க மக்கள் தயாராக இருக்கின்றனர் என்றும் அவர் சொன்னர்.

---

## கோயில் கோபுர மண்டபத் திறப்புவிழா

நீர்வேலி, வெள்ளி

நீர்வேலி கந்தசுவாமி கோயில் புதிய கோபுர மண்டபத்திறப்புவிழா இம்மாதம் 6-ந் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு புஷ்யிரதப்பகுதி முன்னுள் அதிபர் திரு மா. கனகசபையினால் திறந்துவைக்கப் படவிருப்பதாக அறிவிக்கப் படுகிறது.

## திருமலை எண்ணை டாங்கிகள்

கொழும்பு, வியாழன்

திருக்கோணமலை சீனன்குடாவிலுள்ள பிரிட்டிஷ் கடற்படையின் எண்ணை ரங்கிகளை இலங்கை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மேற்கொண்டிருக்கிறது. இதைத் தொடர்ந்து அங்கு பறந்து கொண்டிருந்த யூனியன்ஜாக்கொடி கீழிறக்கப்பட்டு இலங்கை தேசியக்கொடி பறக்கவிடப்பட்டது. 12,000 கலன் எண்ணை இந்த டாங்கிகளில் சேகரித்து வைக்கப்படும்.

---

## "சிறிமாவின் நிழலில் நான்"

கொழும்பு, வெள்ளி

சிறிமா அரசாங்கம் பதவியிலிருக்கும்வரை நான் தொடர்ந்துசுகாதாரமந்திரியாகப்பதவி வகிப்பேன்" என திரு. பதியுதீன் மஹ்மூத் கூறினர்.

"பிற்போக்குவாதிகளும் சதிகாரக் கும்பல்களும் இந்த அரசாங்கத்தை அதன் ஆயுட் காலத்திற்குமுன் வீழ்த்த முடியாது" என்றும் மஹ்மூத் கூறினர்.

---

கொழும்பு, வெள்ளி

இலங்கைப் பல்கலைக்கழக பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் பிரமதமந்திரிக்கு அனுப்பியுள்ள ஒரு மகஜரில் பத்திரிகைக் கமிஷன் கலைக்கப்பட வேண்டும் என பாராளுமன்றத்தில் தெரிவிக்கப் பட்ட கருத்துக்கள் பற்றிக் கவலை தெரிவித்திருக்கிறார்கள். கமிஷன் உபயோகமான வேலைகளையே செய்து வருவதாயும், ஒழுங்கீனம் எதுவும் இல்லை என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள.

## வானொலிநிகழ்ச்சிகள்

### கொழும்பு

**சனி 4-4-64**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கண்டதும் கேட்டதும் — செய்திச்சுருள், 7-00 வி. சந்தானம் — பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு — 'பொருளாதாரம்' — எஸ். பாலகிருஷ்ணன், 9-30 பாலம் கிருஷ்ணன் — பாட்டு, 10-00 நேயர்விருப்பம்.

**ஞாயிறு 5-4-64**

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 மெல்லிசை, 8-15 தமிழ்மூலம் சிங்களம், 8-30 ஞானஞ்சலி, 9-00 முஸ்லிம் ஞாயிறு பாடசாலை, 9-30 திரை இசை, 11-30 சிறுவர்மலர்.

பகல் 11-15 நேயர்விருப்பம்' 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நகுலாம்பிகை வேலாயுதம் — பாட்டு, 5-45 திரை இசை.

இரவு 6-15 தாளவாத்தியக் கச்சேரி, 6-45 பி. முத்துக்குமாரசாமி சர்மா — பாட்டு, 7-15 வீணை, 7-45 நாடகம் — தாய்க்குப்பின் தாரம் — எழுதியவர் சீத்தா பெர்ணண்டோ, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 மாதர்விருப்பம், 9-45 தேர்ந்த இசை, 10-00 நிலையஒலிப்பதிவுகள்.

### திருச்சி

**சனி 4-4-64**

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-30 இசைக் கோவை,

பகல் 1-00 பிள்ளைக் கனியமுது, 1-20 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 எஸ். சிவசாமி — வயலின்.

மாலை 5-15 திரைப்பட இசை, 5-45 வாத்தியஇசை,

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 "அக்டோபர் 20" — நாடகம், 8-00 எஸ். சிவசாமி— வயலின், 9-30 அகிலபாரத சங்கீதநிகழ்ச்சி.

**ஞாயிறு 5-4-64**

காலை 6-30 மங்களஇசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 ஜி. என். ராஜகோகிலம் — பாட்டு, 8-15 மணக்கால் எஸ். ரங்கராஜன் — பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி: கதம்பநிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்தியஇசை, 2-10 பெண்ணுலகம், 3-00 கே. ஆர். லக்ஷ்மி — பாட்டு.

மாலை 5-45 இசைப்பயிர்சி.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 ஜனநாயகம் வெற்றிபெற, 7-45 இசைக்கோவை, 8-15 ஜி. என். ராஜகோகிலம் — பாட்டு, 9-15 தேசபக்திப்பாடல்கள், 9-45 பூமிதேவி பரிணயம் — சங்கீத உபந்யாசம் — எம். பார். விஜயராகவாச்சாரியார்.

## பாடசாலை இடமாற்றம்

கச்சாய், வெள்ளி

கல்வெட்டிதிடல் நாகேசுவர வித்தியாசாலை சேமாபிவிருத்திச்சபையின் விசேட கூட்டம் அதன் தலைவர் திரு. இ. த. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

"குறித்த பாடசாலை காட்டோரத்தில் இருப்பதாலும் இந்தஇடம் புளியம்பொக்கணை வாசிகளுக்குத்தூரமாக இருப்பதாலும் கல்வெட்டித்திடல், புளியம்பொக்கணை ஆகிய இரண்டு கிராமங்களின் மத்தியில் உள்ள குருமன்காட்டில் இப்பாடசாலை மாற்றிக்கட்டப் பட வேண்டும்" என்ற தீர்மானம் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## உடவளவ ஆற்றுப் படுகை

கொழும்பு, வெள்ளி

உடவளவ ஆற்றுப்படுகையிலுள்ள காடுகளில் மரங்களை வெட்டுவதற்கு அனுமதியளிப்பதென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. கடந்த மூன்று மாதங்களில் மட்டும் இந்த மரங்களை விற்றதில் அரசாங்கத்துக்கு 5 லட்சம் ரூபா லாபம் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆரம்பத்தில் இந்தக் காடுகளை எரித்துவிடுவதென அரசாங்கம் கருதியதாயும் ஆனல் பல எம்.பி.க்களின் யோசனைப் படி இந்த மரங்களைத் தறித்துக்கொள்ள அனுமதிப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்குமென எடுத்துக்காட்டியதாயும் கூறப்படுகிறது.

---

## சனசமூக நிலைய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவு, பெருங்காடு சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் கிராமசபைத் தலைவர் திரு கே. அம்பிகைபாகன் தலைமையில் நடைபெற்றபோது பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. சபாரத்தினம், உப-தலைவர் திரு. நடராசா, காரியதரிசி: திரு. க. இரத்தினவேல், உப-காரியதரிசி: திரு. யோ. சற்குணராசா, தனதிகாரி: திரு. நா. பசுபதிப்பிள்ளை, கணக்குப் பரிசோதகர்: திரு. ஐ. நாகரத்தினம்.

---

## பங்கீட்டரிசி

யாழ்ப்பாணம், வெள்ளி

புதுவருட் தினமான 13-ம் திகதிக்கு முதல்வார பங்கீட்டரிசியை, 11-ம் திகதி சனிக் கிழமைக்கு முன் பெற்றுக் கொள்ளும்படி பொதுமக்களுக்கு யூனியன்கள் மூலமும், சங்ககடைகள் மூலமும் அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

13-ம் திகதி பொதுவிடுமுறை தினமாததால், வழக்கமாக திங்கட்கிழமைகளில் அரிசி எடுத்து வரும் யூனியன்கள் 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சென்று அரிசி எடுத்து வந்து, 14-ம் திகதி பொது மக்களுக்கு விற்பனை செய்வார்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## அதிகவிலை

யாழ்ப்பாணம், வெள்ளி

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்கோவிலிலுள்ள சில்லறை வியாபாரிகள் அரிசி, சர்க்கரை போன்ற கோவிற் பூசைக்குத் தேவையான பொருட்களை அதிக விலைக்கு விற்பனைசெய்வதாகத் தெரிய வருகிறது.

இது சம்பந்தமாக அதிகாரிகளுக்கு பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளதாகவும், அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் அறியப்படுகிறது.


புத்துணர்ச்சியுடன் திகழ கோயாவின் புத்தம் புதிய திவ்யமான, மெல்லினிய மணங்கமழும் **என்டைஸ்** பாவியுங்கள்

Goya



ஒரே சுகந்தமுள்ள சோப்பும் டல்க்கும் பாவித்தலே முறையானது. கோயாவின் சுகபோக சோப்பும், வியர்வை துர்நாற்றத்தையும் போக்க வல்ல உலகிலேயே மிக மிருதுவான, மென்மையான டல்க்கும், இவ்வாறு சேர்த்து பாவிப்பதற்கு சிறந்தவை.

ஒவ்வொரு நாளையும் பரிமள புத்துணர்ச்சியுடன் துவங்க, கோயாவின் சுகந்த என்டைஸ் பாவியுங்கள். அதன் இனிய நறுமணம் நாள் முழுவதும் உங்கள் உடலை சூழ்ந்து நிற்கும்.




மற்றும் லவ் எப்பேர் பாஸ்போர்ட் ப்ளாக் ரோஸ் கார்டீனியா நம்பர் 5 சுகந்தங்களிலும் கிடைக்கும்.

கோயா ● லண்டன் ● பாரீஸ் ● நியு யோர்க்

# பத்திரிகை கமிஷன் விசாரணை விபரம்

கொழும்பு, வெள்ளி

'டிரிபியூன்' பத்திரிகையைச் சேர்ந்த திரு. ஏ. எ... ரத்னயகா பத்திரிகைக் கமிஷன் முன் நேற்றுச் சாட்சியமளித்தார்.

பிரதமர் சிறிமா அத்தனகலையில் பாடசாலைக் கூட்டம் ஒன்றுக்கு 5 ஏக்கர் நிலம் அளித்ததை 'ஒப்ஸர்வர்' பத்திரிகை முக்கியமில்லாத ஒரு இடத்தில் பிரசுரித்தது என்றும், சர்ஜோன் கொத்தலாவலை 100 ஏக்கர் நிலம் அளித்தது முதல் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டதென்றும் அவர் கூறினர்.

திரு. அபயக்கூன்: 100 ஏக்கர் பெரிய விஷயமல்ல? (சிரிப்பு). சிலசமயம் மற்றவர்கள் பெரிய அளவு நன்கொடை அளித்தபோதிலும் அது பத்திரிகையில் வெளிவருவதில்லை.

திரு ரத்னயகா மேலும் [illegible] சபையில் தேசியத்திட்டங்களுக்கெதிராக லேக்ஹவுஸ் பத்திரிகைகள் பிரசாரம் செய்து வருகின்றன எனவும், துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டபின் துறைமுகத் தொழிலாளர் வேலை செய்ய மறுத்து விட்டார்கள் என்று "டெய்லி நியூஸ்" பத்திரிகை ஒரு செய்தியைப் பிரசுரித்தது என்றும் கூறினர்.

வேலைநிறுத்தச் செய்திகளை டெய்லிநியூஸ் பத்திரிகை தவருன முறையில் வெளியிடுவதாயும் அவர் கூறினர்.

திரு. அபயக்கூன்: "டைம்ஸ் பத்திரிகை எப்படி?"

சாட்சி: இந்தப் பத்திரிகை பிற்போக்குவாதிகளுக்கு ஆதரவும், இலங்கை விரோத பௌத்த விரோத கொள்கைகளை உடையது.

## கோண்டாவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யல்லவென ஜூரிகள் ஏகமனதாகத் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து நீதியரசர் எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் கோண்டாவிலைச்சேர்ந்த சுப்பன் வெள்ளையனை, 63-ம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 21-ந் திகதி உலக்கையால் அடித்துக் கொலைசெய்ததாக செல்லன் கந்தையாமீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் திரு. ரி. கணேசலிங்கம் திரு. ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக திரு. வி. நடராசா அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரியதரப்பில் திரு. ஏ. ஏ. டி. சில்வா ஆஜரானர்.

டாக்டர் வைத்திலிங்கம் சாட்சியமளிக்கும்போது, காலஞ்சென்றவரைப் பிரேதபரிசோதனை செய்தபோது தலையில் இரண்டரை அங்குல நீளமான காயமிருந்ததாகவும் அக் காயம் உலக்கையின் அடியால் ஏற்பட்டதென்றும்,மூளை சிதறி வெடித்திருந்ததென்றும் கூறினர்.

காலஞ்சென்றவரின் மகன் மூத்ததம்பி, கீழ்க் கோர்ட்டில் அளித்த வாக்குமூலத்திற்கு முரணகப் பலதடவை சாட்சியமளித்தார்.

கணவதி பவளம், ஆசிரியர் எஸ்.நடராசா பொலிஸ் இன்ஸ்பெக்டர் தேவசகாயம், சின்னப்பெரடியன் ஆகியோரும் சாட்சியமளித்தார்கள்.

காலஞ்சென்றவரின் மகன் கீழ்க்கோர்ட்டிலும், அசைஸ் நீதிமன்றத்திலும் முன்னுக்குப்பின் முரணக சாட்சியமளித்து வேண்டுமென்று பொய் வாக்குமூலமளித்தாரென, அவருக்கெதிராகக்குற்றச்சாட்டுப்பத்திரம் தாக்கல்செய்யப்பட்டது.

எதிரி நடந்துகொண்டவிதம் பற்றியும், இறந்துபோனவரின் மரணத்திற்கான காயம் விளைவித்தவர்பற்றியும், காயம் விளைவித்த ஆயுதம்பற்றியும், முக்கியமான அம்சங்களில், சத்தியப்பிரமாணம்செய்து அளித்த வாக்குமூலங்கள் முன்னுக்குப்பின் முரணக் காணபபடுவதால் வேண்டுமென்று பொய்ச் சாட்சியமளித்ததாக முத்துத்தம்பிமீது குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முத்துத்தம்பிசார்பில் திரு. ஏ. அமிர்தலிங்கம் ஆஜரானர். விசாரணை முடியும்வரை முத்துத்தம்பியை பிஸ்கால் பாதுகாப்பில் இருக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

மேல்விசாரணை 6-ம் திகதி திங்கட்கிழமை காலை 9-15மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

## 'கிராமங்களில் கடவுள் பக்தி'

இளவாலை, வெள்ளி

"உண்மையான கடவுள் நம்பிக்கை உடையவர்கள் கிராமப்புற மக்களே. கிராமப்புறங்களிலே வாழ்பவர்கள் அன்றாடவாழ்க்கைக்காக உழைப்பவர்கள். வருவாய்க்கேற்ப செலவு செய்து மனநிறைவு காண்பவர்கள். மனநிறைவு பெற்றவர்களிடம்தான் கடவுள் நம்பிக்கை உண்டாக முடியும்" என்று மயிலங்கூடல் ஞானவைரவர் கோயில் மண்டபத்தில் நடைபெற்ற மயிலங்கூடற் சைவ மகாசபையின் ஆண்டு விழாவின் போது பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்ட மானிப்பாய் சைவ மகாசபைத் தலைவர் திரு. ம. வைரமுத்து குறிப்பிட்டார்.

தேவார திருவாசக மாணவர் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டபின் நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவு நடைபெறறது.

## விளையாட்டுப் போட்டி

புங்குடுதீவு, வெள்ளி

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை இல்லங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் இராசரத்தின இல்லம் 178 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், பசுபதி இல்லம் 120 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், அம்பலவாணர் இல்லம் 96 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் அடைந்தன.

விளையாட்டுப் போட்டியை பேராசிரியர் திரு. சி. சதாசிவம் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். தலைவராக தீவுப்பகுதி வித்தியாதரிசி திரு. ந. பாலசிங்கம் கடமையாற்றினர்.

விழாவில் தீவுப்பகுதி எம். பி. திரு. வ. நவரத்தினம், பருத்தித்துறை வித்தியாதரிசி திரு. வி. முத்துலிங்கம், புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் திரு. சு. வில்வரத்தினம் ஆகியோர் பேசினர்.

பரிசில்களை திருமதி நவரத்தினம் வழங்கினர்.

## இலங்கையரல்லாத என்ஜினியர்கள் பலர் வெளியேறுகின்றனர்

கொழும்பு, வியாழன்

என்ஜினியரிங் தொழிலில் ஈடுபட்டிருந்த இலங்கையரல்லாதவர்கள்மீது நிதிமந்திரி தமது சென்ற வருடத்திய வரவு-செலவுத் திட்டத்தில் விதித்த அதிகவரி முறையினல் இலங்கையரல்லாத என்ஜினியர் பலருடைய சேவைகளை நாம் இழக்கவேண்டி நேரிட்டது என்று இலங்கை என்ஜினியரிங் தொழிற்சங்கத்தின் அறிக்கையொன்று கூறுகின்றது.

இந்த அனுபவமும் தராதரமும் உள்ள என்ஜினியர்களின் சேவை நாட்டின் பொருளாதார விருத்திக்கு மிக அவசியமென்பதை அரசாங்கத்துக்கு எமது சங்கம் எடுத்துக்கூறியும் சாதகமான பயன் கிடைக்கவில்லையென்று அந்த அறிக்கை கூறுகிறது.

## "முதலாளித்துவ சர்வாதிகாரம் மீண்டும் தலைகாட்டுகிறது"

—திரு. இலங்கரத்ன

களுத்துறை, வெள்ளி

"முன்பு நசுக்கப்பட்ட முதலாளித்துவ சர்வாதிகாரம் மீண்டும் தலைகாட்டி வாருகிறது. எனவே முன்னேன்றும் சக்திகள் மீண்டும் ஒன்றுபட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது" என திரு. டி. பி இலங்கரத்ன ஒரு கூட்டத்தில் பேசியபோது கூறினர்.

சோஷலிஸத்துக்கான பாதை இந்த அரசாங்கத்தினல் செப்பனிடப் பட்டிருக்கிறது" என்றும் அவர் கூறினர்.




எஸ் - லொன்
இன்றைய அதிசயமான பைப்

இதுவே ஒரு உண்மையான பல-பயன் தரும் பைப்.... திண்மையானது கனக்குறைவானது, மலிவானது, கையாள்வது சுலபம், உக்காது கறையான் அண்டாது அரிப்பேற்படாது, இரும்பி, கறள், அழுக்குப்படல எதிர்ப்புடையது. எஸ்-லொன் மின்சார கொண்டுயிட் வேலை உட்பட பெரும்பாலான வீட்டு, கைத்தொழில், விவசாய உபயோகத்திற்கு சிறந்த ஒப்பற்ற பைப்.

பைப் வேலை, உங்களுக்கு உண்டானல் அதற்கு உகந்த பைப் எஸ் லொன்தான் ஆகவே இன்றே எங்குமுள்ள சிறந்த ஸ்டோர்களில் அதைக் கேட்டு வாங்க நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்.
மகாராஜா கட்டிடம்.
பேங்ஷால் வீதி, கொழும்பு-11.


## தேவை

கிளிநொச்சி கிழக்குப் பயிர்ச் செய்கைக்குழுவிற்கு ஒரு நீர்ப்பாசனசெயலாளர்(கமவிதானை) தேவை தகைமைகள்:— வயது 25 — 40. கல்வித்தரகதரம் J S C சித்தி. தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் புனிதமாய் எழுதுந்திறமை மிகவும் அவசியம் விண்ணப்பங்கள் கடைசித் திகதி 10 - 4 - 64. தெரிபடும் விண்ணப்பகாரன் குழு எல்லைக்குள் வசிக்கச் சம்மதித்தல் வேண்டும். மாதச் சம்பளம் எல்லாம் உட்பட ரூபா 125.

V. A பிலிப்ஸ்
காரியதரிசி

கி. கி. ப. செ. கு.
பரந்தன். 306

## அறிவித்தல்

15-4-1964 புதன்கிழமை காலை 10 மணிவரை கோப்பாய்க் கிராமசபைத் தலைவரால் "கோப்பாய் வடக்கு 2-ம் வட்டாரம் இலக்டி ரோட்டு வேலைக்கு" "சீல்" இடப்பட்ட கோள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

இச்சபையினல் அங்கீகரிக்கப்பட்ட ரூ 5000 க்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவுள்ள ஒப்பந்தகாரர்களுக்கு மட்டும் கேள்விப்பத்திரங்கள் 11-4-64 நண்பகல் 12 மணி வரைக்கும் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரப் பணமாக ரூ. 5 ம் கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூ. 20 ம் செலுத்திய பின்னரே கேள்விப்பத்திரம் வழங்கப்படும். கேள்விப்பத்திரப் பணம் ரூ. 5 ம் திருப்பிக்கொடுக்கப்பட மாட்டாது. மேற்கொண்டு விபரங்களெதுவும் அறிய விரும்பின் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

பொ. தி. சம்பந்தன்.
தலைவர்,
கிராமசபை, கோப்பாய்.

கிராமசபை அலுவலகம்,
கோப்பாய்
2-4-1964. 305

## "சரியானசமயத்தில் பதிலளிப்பேன்"

### பிலிப் அறிவிப்பு

அவிசாவளை, வியாழன்

"என்னைப்பற்றிப் பத்திரிகைகள் என்னவெல்லாமோ சொல்லுகின்றன. நான் சரியான சமயத்தில் அவைகளுக்குப் பதிலளிப்பேன்" என்று எம். ஈ. பி. தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன அவிசாவளை நகரசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

"எனக்கு இப்பொழுது வயது 63. இதர் பகுதி மக்களைவிட ஹேவகம கோரளையிலுள்ள மக்கள் சிறிது அதிக காலம் வாழ்வார்களென்பது பொதுவான நம்பிக்கை. எனக்குத் தொய்வு வியாதி இருப்பினும் மக்களுக்குச் சேவை செய்வதற்கு எனகது இன்னமும் சக்தியிருக்கிறது" என்று திரு பிலிப் கூறினர்.

## "ஆட்சிகாலம்வரை பதவி வகிப்போம்"

காலி, வெள்ளி

அரசாங்கம் கவிழ்க்கப்பட்டாலும், நாங்கள் தொடர்ந்து எங்கள் காலம் வரை ஆட்சி நடத்துவோம் என்று ரத்கம எம். பி. திரு. டி. ஈ. திலகரத்தின சீனிகமவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசும்போது கூறினர்.

திரு, திலகரத்தின தொடர்ந்து கூறியதாவது:-

சர்வதிகாரத்தை அரசாங்கம் அனுமதியாதென்றும், காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமென்றும் பிரதமர் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார். காலனி ஆட்சியையும், முதலாளித்துவ ஆட்சியையும எதிர்த்த மக்கள் புத்தியற்றவர்களல்ல."

## வரி விளம்பரம்

ஜெயா பிஸ்கட் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யும் பிஸ்கட், கேக் போன்ற பொருட்களை கொண்டுசென்று விநியோகம் செய்யக்கூடியவர்கள் தேவை.

நல்ல கொமிஷன் நேரில் வரவும். கிழமையில் காலை 8-00 மணி – 10-00 மணி.

Jeya Biscuit Manufacturers,
Thirunelvely, Jaffna. 205



## தேநீர் விருந்து

யாழ்ப்பாணம் கொழும்பு ஸ்ருடியோ உரிமையாளர் திரு. அ. குகதாசன் அவர்கட்கும், செல்வி நா. நேசம்மா அவர்கட்கும் 10-4-64-ல் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தையொட்டி அன்று பிற்பகல் 3 மணி முதல் 8 மணி வரை யாழ்ப்பாணம் விக்டோறியா ரோட் 3-ம் இலக்க இல்லத்தில் நடைபெறவிருக்கும் தேநீர் விருந்தில் கலந்து, மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு நண்பர்கள், உற்றூர், உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்படவில்லை என்பதை அறியத்தருகிறோம்.

K. அருளம்பலமும் பாரியாரும்
K நாகலிங்கமும் பாரியாரும், 208

## அரைச்சலார்

அநேக மக்களின் ஆதரவு பெற்ற சுன்னுகம் "பிறின்ஸ்" புகைப்பட ஸ்தாபனத்தார் 10-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 25-4-64 வரை அரைச்சலார். 62

## றேடியோ

வாங்கவோ, விற்கவோ பழுதுபார்க்கவோ, சிறந்த இடம்.

S. சுலைமான்கண்டு & பிரதர், காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 55

## தொய்வு, நீரிழிவு

தணப்படுத்த உத்தரவாதம மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50,

வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்,

## தேவை

தற்காலிக மின்சார அமைப்பு வேலை செய்யத் தெரிந்தவரும், மின்சார அமைப்பு வேலையிலும், தண்ணீர் பம், தண்ணீர் பைப் வேலையிலும் 10 வருட அனுபவமுள்ள 30 வயதுக்கு மேற்பட்ட ஒரு வேலையாள் தேவை.

சம்பள விபரம் ரூபா 150/- தராதரத்தைப் பார்த்துச் சம்பளம் கூட்டிக்கொடுக்கப்படும்

நியூற்றன் எலற்றிக்கல்ஸ் 228, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 206

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

"நேருவுக்குப்பின்

# தலைமைப்பதவியை ஏற்க ஆற்றல்படைத்தவர்களுண்டு

## வாஷிங்டனில் திரு. பவுல்ஸ் பேச்சு

வாஷிங்டன், ஏப்ரல் 3

இந்தியாவில், 75 வயதான பிரதம மந்திரி திரு. ஜவஹர்லால் நேரு பதவியில் இல்லாதிருந்தாலும் கூட, இந்திய அரசாங்கத்துக்குத் தலைமை வகிக்க வலிமைமிக்க தலைவர்கள் இருக்கிருர்கள் என டில்லியிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் திரு. செஸ்டர் பவுல்ஸ் இங்கு கூறினர்.

"இந்தியாவில் எத்தனையோ பிரச்னைகள் இருந்த போதிலும் அந்த மாபெரும் நாட்டை ஒற்றுமையாய் இணைத்து வைத்திருக்கும் சக்தியை பிரதமர் நேரு பெற்றிருக்கிருர். அதே சமயம், காங்கிரஸ் கட்சி அங்கு ஸ்திரத்தன்மை பெற்றிருக்கிறது. இந்தியாவில் மிக ஆற்றல் படைத்தவர்கள் இருக்கிருர்கள். எனவே நேருவுக்குப் பின் புதிய தலைவரைத் தெரிவு செய்வதால் கஷ்டம் எதுவுமிருக்காது" என்றும் திரு. பவுல்ஸ் கூறிருர்.

# தமிழ் அரசாங்கஊழியர் சங்க தனதிகாரிக்கு கட்டாய ஓய்வு

கொழும்பு, வெள்ளி

பெரிய தபாற் கந்தோரில் வர்த்தகப் பகுதியைச் சேர்ந்த அக்கவுண்டன்ட் திரு. எம். சரவணமுத்து என்பவருக்கு நேற்று முன்தினம் கட்டாய ஓய்வு உத்தரவு வழங்கப் பட்டது. உத்தியோக மொழியில் தேர்ச்சி பெறத் தவறியதற்கு தகுந்த காரணம் காட்டவில்லையென்பதனல் கட்டாய ஓய்வுக்கான உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இவருடன் இதுவரை ஏழு அரசாங்க ஊழியருக்கு கட்டாய ஓய்வு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. திரு. சரவணமுத்து தமிழ் அரசாங்க ஊழியர் சங்கத்தின் தனதிகாரி யென்பது குறிப்பிடத்தக்கது.

# மூன்று வருடத்திற்கு மது அருந்தக்கூடாது

## நன்நடத்தைப் பிணையில் விடுதலையானவருக்கு நிபந்தனை

யாழ்ப்பாணம், சனி

ஊறணி கொலை வழக்கில், மூன்று வருடகால நன்னடத்தைப் பிணையில் செல்ல, நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. சி.யினல் அனுமதிக்கப்பட்டு, பிஸ்கால் பாதுகாப்பில் இருந்த மூத்தான் வேலன் என்பவர் நேற்றுக் காலை நீதியரசர் முன்னிலையில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டார்.

3 வருடகால நன்னடத்தைப் பிணையில் செல்ல அனுமதிப்பதாகவும், இந்த 3 வருடத்திலும் மதுபானம் அருந்தக் கூடாதென்றும், இங்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், மதுபானம் அருந்துபவர் என்று தெரிவிக்கப்படவில்லையென்றாலும், இனிமேல் மதுபானம் பாவிக்கக் கூடாதென்றும், இந்த நிபந்தனைகளை மீறினல், மீண்டும் நீதமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, குற்றத்திற்கு தண்டனை பெற வேண்டுமென்றும், நீதியரசர் தெரிவித்தார்.

இந்த நிபந்தனைகளுக்கு நன்னடத்தைப் பிணையில் விடுதலையான வேலன் சம்மதித்தார். பாதுகாப்பு உத்தியோகத்தரின் மேற்பார்வையில் இருக்க வேண்டுமென்றும், அவர் எல்லாவுதவிகளும் செய்வாரென்றும், அவரின் கட்டளைகளை மீறினல் தண்டனை கிடைக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு உத்தியோகத்தர் குறிப்பிட்ட இடத்தில் சந்திக்க வேண்டுமென்றும், அவர் அனுமதித்த இடத்தில் குடியிருக்க வேண்டுமென்றும் அனுமதி பெருமல் வேறு இடத்தில் குடியிருக்கக் கூடாதென்றும், அமனுதியில்லாமல் தகாத ஆட்களுடன் கூடக்கூடாதென்றும், கட்டளைக்கு அமைந்து நடக்க வேண்டுமென்றும், 3 வருட காலத்திற்கு மதுபானம் அருந்தக்கூடாதென்றும், அந்த நிபந்தனையில் தெரிவிக்கப்பட்டது.

மூத்தான் சின்னன் என்பவர் 500 ரூபாய் பிணையில், 3 வருட நன்னடத்தைப் பிணையில் விடுதலை செய்யப்பட்ட வேலனை கூட்டிச் செல்ல சம்மதமென்றும், தேவையான போது அவரை நீதிமன்றத்திற்குக் கூட்டிவருவதாகவும் தெரிவித்தார்.

இவ்வழக்கில் காங்கேசன் துறைப் பகுதியைச் சேர்ந்த ஊறணியில் 63-ம் ஆண்டு, ஜூன் மாதம் 12-ம் திகதி மூத்தான் வேலன் என்பவர், வைரவன் குழந்தையனை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரியின் சார்பில் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம், ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். முடிக்குரிய தரப்பில் திரு. ஏ. ஏ. டி.சில்வா வழக்கை நடத்தினர்.

# யாழ்-இந்திய பாடசாலைகள் கிரிக்கெட் போட்டி

## இம்மாத இறுதியில் இங்கு நடைபெறும்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண பாடசாலைகள் கிரிக்கெட் சங்கக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் திரு. கே. பூரணம்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது யாழ்ப்பாணக் கல்லூரிகள் கோஷ்டிக்கும் அகில இந்திய கல்லூரிகள் கோஷ்டிக்குமிடையே இம்மாதம் 30 ம் திகதியும் அடுத்த மாதம் முதல் திகதியும் கிரிக்கெட் போட்டி இடம் பெறச் செய்ய ஒழுங்குகள் மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இப்போட்டி யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரிகளின் கோஷ்டிக்கானவர்களைத் தெரிவு செய்வதற்கு தெரிவுக் குழு இம்மாதம் 8 ம் திகதி காலை யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் கூடவிருக்கின்றது.

இந்தத் தெரிவுக்கான சிபார்சுகள் இம்மாதம் 6 ம் திகதிக்கு முன்னர் பாடசாலைகளிடமிருந்து கோரப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரிகளிலிருந்து 19 வயதுக்குட்பட்டவர்களே தெரிவு செய்யப்படவிருக்கிருர்கள்.

இங்கு நடைபெறவிருக்கும் இப்போட்டிக்கான ஏற்பாடுகளைக் கவனிக்க விசேஷ குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

# ஆங்கிலக்கால்வாயை கடக்க சிறுமி முயற்சி

லண்டன், ஏப். 3

பிரிட்டனையும் ஐரோப்பாவையும் பிரிப்பதாகவுள்ள ஆங்கிலக் கால்வாயை 13 வயதான அமெரிக்க பாடசாலை மாணவியான விஞேரே மோல்டல் நீந்திக் கடக்கத் தீர்மானித்துள்ளார் என தெரியவருகிறது.

இதற்காக இச் சிறுமியை தயார்ப்படுத்தும் பயிற்சி ஆசிரியரான பால்ஹெறோன் தமது பயிற்சிக்கு விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி வருகிருர். நீரின் உறை நிலைக்கு 4 புள்ளிக்கு அதிகமான குளிர் நீரில் 4 மணி நேரம் நீந்த அவர் விஞேரேயை ஊக்குவித்து வருகிருர்.

இவ்விதம் உடலில் உரமேறிய விஞேரே சமீபத்தில் டாகோயே ஏரியில் 14 மணி 34 நிமிட நேரத்தில் 25 மைல் தூரத்தை நீந்திஞர். விஞேரே கலிபோர்னியாவிலுள்ள சாக்ரமெண்டோவை சேர்ந்தவர். ஆங்கிலக் கால்வாயை அவர் நீந்திக் கடந்து விட்டால் அச் சாதனை நிலைநாட்டியவர்களுள் மிகக் குறைந்த வயதுகொண்டவராக பாராட்டப்படுவார்.

# "நடந்தது உண்மை ஆனல் சத்தியம்செய்யேன்"

## தாலிக்கொடி திருட்டு வழக்கில் சாட்சியம்

காங்கேசன் துறை, வெள்ளி

"எனது மனைவியின் தாலிக் கொடியை எதிரி திருடியது உண்மை. ஆனல் இதுசம்பந்தமாக நான் கடவுள் மீது சத்தியம் செய்யமாட்டேன்" என்று தாலிக்கொடி திருட்டு வழக்கில் ஸ்ரீ தற்பரானந்த குருக்கள் சாட்சியமளிக்கையில் கூறினர்.

ஸ்ரீ தற்பரானந்த குருக்களின் மனைவியின் தாலிக் கொடியை கடந்த நவம்பர் மாதம் 8-ந் திகதி திருடியதாக கீரிமலையைச் சேர்ந்த வி. செல்வராசா என்பவர் மீது குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட இவ வழக்கு இன்று மல்லாகம் கோர்ட்டில், மாஜிஸ்திரேட் அத்றுபான முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்காளி சார்பில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. அரசரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. அ. குமரகுரு ஆஜரானர். எதிரி சார்பில் த. தம்பிரத்தினம் ஆஜரானர். மேல் விசாரணை இம் மாதம் 24-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட்போட்டி

# மத்தியகல்லூரி—ஹாட்லி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை 3 மணியளவில் ஆரம்பமான கிரிக்கெட்போட்டி முதல் இன்னிங்சில் ஹாட்லிக் கல்லூரிகோஷ்டியினர் 176 ரன்களை எடுத்தனர். மத்திய கல்லூரி கோஷ்டியினர் மதது முதலாவது இன்னிங்சில் எந்த விக்கட்டுகளையும் இழக்காது 2 ரன்கள் எடுத்தனர்..

ஹாட்லிக் கல்லூரிக் கோஷ்டியைச் சேர்ந்த ஏப்ரகாம் 44 ரன்களை எடுத்தார். நடராஜ சுந்தரம் 37 ரன்களை எடுத்தார். இதில் அவர் 8 பவுண்டரிகளை அடித்தது குறிப்பிடத்தக்கது.

'பீல்டிங்'கின் போது மத்திய கல்லூரியைச் சேர்ந்த அம்பலவாணர், சச்சிதானந்தம், பற்குணராசா ஆகிய மூவரும் தலைக்கு இரு விக்கட்டுகளை வீழ்த்தினர்.

போட்டி இன்று தொடர்ந்து நடைபெறும்.

# மாணவிகள் விஜயம்

யாழ்ப்பாணம், சனி

வேம்படி பெண்கள் உயர்தரக் கல்லூரியைச் சேர்ந்த 31 ஜி. ஸி. ஈ. 'ஏ' விஞ்ஞான வகுப்பு மாணவிகள் நேற்று 'ஈழநாடு' பத்திரிகை காரியாலயத்துக்கு வந்து பார்வையிட்டனர். கல்லூரி அதிபர் செல்வி எம். தம்பையா, ஆசிரியை செல்வி பி. துரைசிங்கம் தலைமையில் இங்கு வந்த மாணவிகள் செய்தி பத்திரிகை அச்சிட்டு வெளியாவது சம்பந்தமான விபரங்களை நுணுக்கமாக ஆராய்ந்தறிந்தனர்.

# யாழ்ப்பாணத்துக்கு சென். தோமஸ் கோஷ்டி விஜயம்

யாழ்ப்பாணம், சனி

கல்கிசை சென். தோமஸ் கல்லூரி கிரிக்கெட் கோஷ்டியினர் இங்கு இம்மாதம் 8-ந் திகதி விஜயம்செய்யவிருக்கின்றனர்.

இங்கு 5 நாட்கள்வரை தங்கியிருக்கும் இக் கோஷ்டியினர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியுடனும் சென். ஜோன்ஸ் கல்லூரியுடனும் தனித்தனியே விளையாடுவார்களெனத் தெரிகிறது.

# நீக்ரோக்களுக்கும் மரியாதை உண்டு

வாஷிங்டன், ஏப். 3

அமெரிக்காவின் தென் மாநிலங்களில் உள்ள நீதிமன்றங்களில் சாட்சியமளிக்கும் நீக்ரோ சாட்சிகளுக்கும் வெள்ளையர்களைப் போலவே பெயருக்கு முன் 'திரு', 'திருமதி' அல்லது 'குமாரி' என்று மரியாதை நடைமொழியுடன் அழைக்கப்படும் உரிமை உண்டு என அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் ஒரு வழக்கில் தீர்ப்புக் கூறியுள்ளது.

ரீகல் (யாழ்ப்பாணம்)
REGAL — JAFFNA
NOW SHOWING
Daily at 4-45, 7-00 & 9-45 p. m
Morning Shows
Sats. & Suns. at 10-30 a. m.
DEAN MARTIN
in
SONGS IN THE WORLD
( Totalscope—Colour ) 81

# மண்ணெண்ணை . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தையின் தாயார் வள்ளி சாட்சியமளிக்கையில்முந்தநாள் 11 மணியளவில் குழந்தையைக் குசினிகருள் விட்டுவிட்டு மாடு பிடித்துக்கட்டச் சென்றதாகவும் திரும்பி வந்து பார்த்த பொழுது குழந்தை கிடந்து மூச்சுவிட முடியாது திக்குமுக்காடியதாகவும் வாயிலும் முகத்திலும் எண்ணை இருந்ததாகவும் அடுத்த வீட்டிலுள்ள தமது மாமியின் உதவியுடன் புத்தூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதாகவும் கூறினர். அங்கு சிகிச்சை பெற்று வீட்டுக்குத் திரும்பி வந்தபின்னர் மீண்டும் குழந்தைக்கு நோய் கண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

விபத்தினல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனி வீதி)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை)
விஜிதா (மாட்டன்) மொடேர்ன் (பதுளை) வெம்பிளி (கண்டி)
கல்யாணி (நாவலப்பிட்டி)



எம். ஜி. ராமசந்திரன்—பி. சரோஜாதேவி
எம். ஆர் ராதா டி. ஆர். ராஜகுமாரி
மற்றும் பலர் நடித்த
பெரிய இடத்துப் பெண்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.